# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.326/2018** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா–12 (PW–12)** |
| **பெயர்** | :– | **மருத்துவர். சரவணன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜுலைதிங்கள் 28 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் மனநல மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு சென்னை அரசு மனநல மருத்துவமனையில் மனநல மருத்துவராக பணியாற்றியபோது 20.01.2018 ஆம் தேதியன்று சின்னகாளிசெட்டி என்பவரின் மகன் 55 வயதுடைய வடிவேல் என்பவர் சேலம் 05 ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவரின் ஆணையின்பேரில் மனநல மேல்சிகிச்சைக்காக சென்னை மனநல மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். முன்னதாக சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவர் மனநல பிரிவில் 06.01.2018 ஆம் நாள்முதல் 16.01.2018 ஆம் நாள்வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று பின்னர் மேல்சிகிச்சைக்காக அங்கு வந்தார்.

20.01.2018 ஆம் தேதியன்று 01 ஆம் பகுதியில் உள்நோயாளியாக அனுமதித்து பரிசோதனைகள் மேற்கொண்டேன். அப்போது அவருக்கு தூக்கம் இன்மை, தேவையற்ற அதிக அளவிலான பேச்சு, கோபம் மற்றும் எரிச்சலான மனநிலை, எண்ண ஓட்டத்தில் குறைபாடு ஆகியவை இருந்தன. அவருக்கு உடல் அளவிலான, மன அளவிலான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில் அவர் தீவிரமான மனநோயான இருமுனை மனநல கோளாறு ( Bipolar mood disorder current episode mania) என்ற நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று தெரியவந்தது.

மேலும் அவர் காசநோயாலும் பாதிக்கப்பட்டிருந்தார். அதற்கான சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட்டது. தொடர்சிகிச்சை மூலம் அவருடைய மனநிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. அவருடைய தூக்கம், மனநிலை, எண்ண ஓட்டம் ஆகியவை சீராக ஆனது. அவரை சென்னை அரசு மனநல மருத்துவமனையில் பார்வையாளர்கள் குழுமுன் நிறுத்தி அவரை விடுவிப்பதற்கான உத்தரவு

பெறப்பட்டது. அவரை 19.02.2018 ஆம் தேதியன்று விடுவித்து ஆயுதப்படை வழிக்காவல் மூலம் சேலம் 05-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர்முன் நேர்நிறுத்தவும் சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையின் மனநல பிரிவில் வெளிநோயாளியாக தொடர்சிகிச்சை அளிக்கவும் காச நோய்க்கு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. நான் வழங்கிய சான்று **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

இதுபோன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முடிவு செய்வதில் குறைபாடு இருக்கும். இதுபோன்றவர்கள் தனக்குத்தானே காயம் விளைத்து ஊறு விளைவித்துக் கொள்வார்கள். மற்றவர்களை நோக்கி என்ன செய்கிறோம் என்று ஓரளவு இதுபோன்றவர்களுக்கு தெரியும். மேற்சொன்ன குறைபாடு மது அருந்துவததாலும் போதை பொருட்களை உட்கொள்வதாலும் ஏற்படுவதற்கோ அதிகரிப்பதற்கோ வாய்ப்புகள் உண்டு. ஒருவர் பெருந்தவறு செய்துவிட்டு வருந்தினால் இதுபோன்ற குறைபாடு ஏற்படுமா என்றால் வாய்ப்பு மிக குறைவு.

**குறுக்கு விசாரணை**

எதிரிக்கு காணப்பட்ட குறைபாடு மது அருந்துவததாலும் போதை பொருட்களை உட்கொள்வதாலும் ஏற்படுவதற்கோ அதிகரிப்பதற்கோ வாய்ப்புகள் இல்லை என்றும் அது முழுக்கமுழுக்க மனநல குறைபாடுதான் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.